# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,074 — 1934 ம் ௵ ஆவணிமீ 24 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்கள், ஹவலக்ரோட்டை திம்பிரிகாசிய ரோட்டிலிருந்து டிக்மன்ஸ் ரோட்டுவரைக்கும் அகலிப்பதாகிய ஒரு பகிரங்கத் தேள்வைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணிகளை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் :

பிரதமபடத்து இல. A 391. வம்பலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஹவலக் ரோட்டு வரிப் பண இல. 116 உள்ள காணியின் ஒரு பகுதி | 15 வருஷ றப்பர்மரங்களிரண்டுள்ள தோட்டம் | ஹவலக்ரௌன், ஸ்கெல்ற்றன் ரோட்டிலுள்ள ஸ்ரீமதி சி.வி.பி. பெரேரு | 0 | 0 | 6·95 |
| 2 | ஹவலக் ரோட்டு வரிப் பண இல. 118 உள்ள காணியின் ஒரு பகுதி | 15 வருஷ றப்பர்மரமொன்றும், கற்சுவரின் ஒரு பகுதியிலரைவாசியும், இரும்புவாயிற் கதவுத்தூண்களின் கொன்கிறீற் அத்திவாரமிரண்டும், இரும்புவாயிற் கதவுத் தூண்களிரண்டும், வயிற் கதவு 1 ம், வரப்புக்கல்மூன்றின் பகுதிகளும், வீட்டு வழிப்பாதையின்பகுதிகளுமுள்ளதோட்டம் | கொழும்பு, அலுத்மாவத்தை ரோட்டிலுள்ள ஸ்ரீமதி கே. எச். டி. சில்வா | 0 | 0 | 7·17 |
| 3 | ஹவலக் ரோட்டு வரிப் பண இல. 120 உள்ள காணியின் ஒரு பகுதி | பூமரங்களும் முத்தமும், கற்தான்களின் பகுதிகளும், வீட்டு வழிப்பாதைகளின் பகுதிகளும், தூண்களுள்ள கற்சுவர்களும், 2 கற்சுவர்களின் பகுதிகளின் அரைவாசியும், ஆராய்ச்சித் துவாரமொன்றும், மின்சாரத் தூணென்றுமுள்ள தோட்டம் | ஹவலக்ரௌன், ஹவலக் ரோட்டிலுள்ள கே. ஏ. டி. சில்வா | 0 | 0 | 6·67 |
| 4 | ஹவலக் ரோட்டு வரிப் பண இல. 122 உள்ள காணியின் ஒரு பகுதி | 15 வருஷ ஒரு பனையும், 15 வருஷ ஒரு வாகை மரமும், கற்கானின் ஒரு பகுதியும், கற்சுவரின் பகுதியிலரைவாசியுமுள்ள தோட்டம் | கொழும்பு, கின்சிரோட்டிலுள்ள ஸ்ரீமதி மிஸ். பி. தம்பையா | 0 | 0 | 5·47 |
| 5 | ஹவலக் ரோட்டு வரிப் பண இல. 124 உள்ள காணியின் ஒரு பகுதி | 15 வருஷ ஒரு பனையும், 5–15 வருஷ தென்னமரங்களிரண்டும், 12 வருஷ றப்பர் மரமொன்றும், வீட்டு வழிப்பாதையின் பகுதியும், கற்கானின் ஒரு பகுதியும், கற்சுவரின் பகுதியினரைவாசியுமுள்ள தோட்டம் | கொழும்பு, கின்சிரோட்டிலுள்ள எஸ். எஸ். சண்முகம் | 0 | 0 | 5·65 |
| 6 | ஹவலக் ரோட்டு வரிப் பண இலக்கங்கள் 126 ம், 128 முள்ள காணியின் பகுதிகள் | 20 வருஷ தென்னமரங்கள் 2 ம், தூண்களுள்ள கற்சுவர்களும், கற்காணிகளின் பகுதிகளும், கற்சுவரின பகுதியும், கற்சுவரின் பகுதிகளினரைவாசியும்ஆராய்ச்சித் துவாரமும் உள்ள தோட்டம் | கொழும்பு, அடம்ஸ் அவெனியூவிலுள்ள பி. ரி. எஸ். டி. சேரம் | 0 | 0 | 11·52 |
| 7 | ஹவலக் ரோட்டு வரிப் பண இலக்கம் 130 உள்ள காணியின் ஒரு பகுதி | 12 வருஷ தென்னமரமொன்றும், 15 வருஷ வாகைமரமொன்றும், 8 மாச வாழைமரமொன்றும், கற்சுவர்களும் தூண்களும், கற்கானின் ஒருபகுதியும், 2 கற்சுவர்களின் பகுதிகளினரைவாசியும் ஆராய்ச்சித் துவாரமொன்றுமுள்ள தோட்டம் | ஹவலக்ரௌன், ஹவலக ரோட்டிலுள்ள ஆர். ஜே. பெரேரு | 0 | 0 | 11·57 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 8 | ஹவலக் ரேட்டு வரிப் பண இலக்கம் 132 உள்ள காணியின் ஒரு பகுதி | ஒரு வருஷப் பப்பாசிமரம் 1 ம், கற்கானின் ஒருபகுதியும் கற்சுவர்களின் பகுதிகளினை வாசியுமுள்ள தோட்டம் | கொழும்பு, அங்கொடையிலுள்ள டக்டர் டபிள்யு. எஸ். பேர்னன்டோ | 0 | 0 | 5·92 |
| 9 | ஹவலக் ரேட்டு வரிப் பண இலக்கம் 134 உள்ள காணியின் ஒரு பகுதி | 5 வருஷ பலாமரம் 1 ம், பூமரங்களும், வீட்டு வழிப்பாதையின் ஒரு பகுதியும், வரப்புக்கற்கள் இரண்டின் பகுதிகளும், 2 கற்றூண்களும், கற்சுவர்களின் பகுதிகளினரைவாசியும், 1 ஆராய்ச்சித் துவாரமும் உள்ள தோட்டம் (பூந்தோட்டக்காரர்) | ஹவலக் ரௌணிலுள்ள எல். வி. மாட்டின்ஸ்ரின் | 0 | 0 | 5·57 |
| 10 | ஹவலக் ரேட்டு வரிப் பண இலக்கம் 136 உள்ள காணியின் ஒரு பகுதி | 10–20 வருஷ தென்னைமரங்கள் 3 ம் பூந்தோட்டமும், கற்சுவரின பகுதியினரைவாசியும், கற்கானின் பகுதியும், தம்ப பீடத்தின் பகுதியும் ஆராய்ச்சித்துவாரமொன்றுமுள்ள தோட்டம் | ஹவலக் ரௌணிலுள்ள எஸ். டி. சேரசிங்க | 0 | 0 | 11·75 |
| 11 | டிக்மன்ஸ் ரேட்டு வரிப் பண இலக்கம் 75 உள்ள காணியின் ஒரு பகுதி | 20 வருஷ தென்னைமரம் 1 ம், 10 வருஷ பலாமரங்கள் 2 ம். 5–10 வருஷ மாமரங்கள் 2 ம், 5 வருஷ விலிம்பிமரம் 1ம், 2 வருஷ முருங்கை மரம் 1 ம், 4 வருஷ எலுமிச்சமரம் 1 ம், 2 வருஷ சீதாமரம் 1 ம், 15 வருஷ செள மரம் 1 ம், 30 வருஷ பனைமரம் 1 ம், 15 வருஷ காட்டுத்திப்பிலிப்பனை 1 ம், 5 வருஷ வாகை மரம் 1 ம், 30 வருஷ ஆண்டான் மரம் 1 ம், 30 வருஷ விலிமபுல் மரம் 1 ம், 30 வருஷ புளியமரம் 1 ம், ஆராய்ச்சித் துவாரம் 1 ம், ஆராய்ச்சித்துவாரம் ஒன்றின் பகுதியும், கற்கானின் பகுதியுமுள்ள தோட்டம் | கொள்ளுப்பிட்டி, காலி ரேட்டிலுள்ள எம். எச். எம். யுசுப் | 0 | 0 | 13·30 |

மேற்சொல்லப்பட்ட காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும், தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதிமீ 17 ங் திகதி திங்கட்கிழமை, காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்று உறுதிகளாலும், பதிவு கொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி, அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்கக் கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஞூ ஆகஸ்ட்மீ 24 ங் உ.

டபிள்யு. எல். மேர்பி,
நகரசங்க சபாநாயகரும், கொழும்பு நகராதிகாரியும்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 864 (குருநாக்கல்).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோர்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1934 ம் ஞூ (ஆகஸ்ற்) ஆவணிமீ 24 ங் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியில் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயமாக செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1934 ம் ஞூ (ஜூன்) ஆனிமீ 23 ங் தேதியிலன்று குருநாக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஸீ. ஹெறிசன் ஜோன்ஸ்,
வடமேல்மாகாண அரசாட்சி ஏசண்டர்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல்மாகாண அரசாட்சி ஏசண்டர் அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ் சொல்லப்படும் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில், குருநாக்கல் டிஸ்திறிக்கில் வன்னிஹற்பத்துவில் கந்திகேகோறளையில் கோணமெடித்தா என்னும் கிராமத்தில் இருக்கின்றன :—

பிரதமபடம் இல. A 222.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | வதுறசயாயா .. .. | 1 | 0 | 13 |
| 2 | ஷை .. .. | 0 | 2 | 32 |
| 3 | வதுறசயாயா .. .. | 12 | 1 | 8 |
| 4 | ஷை .. .. | 0 | 0 | 15 |
| 5 | ஷை .. .. | 0 | 3 | 37 |
| 6 | ஷை .. .. | 0 | 0 | 35 |
| 7 | ஷை .. .. | 0 | 2 | 25 |
| 8 | ஷை .. .. | 0 | 1 | 17 |
| 9 | ஷை .. .. | 0 | 1 | 5 |
| | மொத்தம் | 16 | 2 | 27 |

எல்லைகள் : வடக்கே-கோணமெடித்தாவிலிருந்து இகர்ருவாலைக்குப் போகும் ரேட்டு; கிழக்கே-நாவலத்தை கிராம எல்லையும், 2,292 ம் பிரதமபடத்தில் கே. முதலிசாமியாலும் மற்றவர்களாலும் உரித்தாடும் இகனேகலகேனை எனப்படும் K 1,158 ம் துண்டும்; தெற்கே-முடிக்குரிய வதுறஸ்சயாய; மேற்கே-அனுராசபுரமிருந்து குருநாகலுக்குப் போகும் ரேட்டு.

---

## சுப்பிறீங்கோட் அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது காலி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் தென்மாகாணத்தைச்சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை, 1934 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ங் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
ஜே. டி. பிறவுண்,
தென்மாகாண பிஸ்கால்.

காலி பிஸ்கால் கந்தோர்,
1934 ம் ஞூ ஆகஸ்ட்மீ 15 ங் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.